# கொழும்புப் பல்கலைக் கழகம், இலங்கை

## சட்ட பீடம்

## சட்டமாணிப் பரீட்சை - ஆண்டு III, 2017

## சர்வதேச முதலீட்டுச் சட்டம்

(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 07

ஒவ்வொரு பகுதியிலுமிருந்து இவ்விரண்டு வினாக்களைத் தெரிவு செய்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

(தெளிவற்ற கையெழுத்திற்குப் புள்ளிகள் குறைக்கப் படும்)

---

பகுதி அ

கிளீனப் என்பது அனோரா அரசில் பதிவு செய்யப்பட்ட குப்பைகூழங்களை மீள் சுழர்ச்சி செய்யும் வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கின்றதான கம்பனியொன்றாகும். இன்சொம்னியா அரசில் குப்பைகூழங்களை மீள் சுழர்ச்சி செய்வதற்கு அதிக வாய்ப்பிருப்பதை அறிந்து கொண்ட கிளீனப் இன்சொம்னியா அரசின் தலைநகரான ஜேமியாவின் மாநகர சபையுடன் கூட்டு முயற்சி உடன்படிக்கையொன்றில் ஈடுபட்டது. ஜேமியா, அரசின் நேரடிக் கட்டுப்பாட்டுக்குள் வருகின்றது. கூட்டு முயற்சி உடன்படிக்கையின் கீழ் ஜேமியா மாநகர சபை குப்பைகளைச் சேர்த்து, அவற்றை வகைப்படுத்தி, கிளீனப்பின் மீள் சுழர்ச்சித் தொழிற்சாலை காணப்படுவதான, ஜேமியாவிற்கு மிகவும் தூரத்திலில்லாததான நகரமான வேர்னியா எனுமிடத்தில் ஒப்படைக்க வேண்டும். மீள் சுழர்ச்சி இயந்திரங்கள் செயற்படுத்தப் படுவதற்குப் பூகோள ரீதியாக உகந்ததென்ற காரணத்தினாலேயே கிளீனப் இவ்விடத்தைத் தெரிவு செய்திருந்தது.

அனோராவிற்கும் இன்சொம்னியாவிற்குமிடையில் காணப்பட்டதான இருதரப்பு முதலீட்டுப் பொருத்தனை (Bi-lateral Investment Treaty / BIT) முலீட்டிற்கு முழு உத்தரவாதம் வழங்கிய போதிலும், உள்நாட்டுச் சச்சரவு அல்லது கலவரம் காரணமாக முதலீட்டிற்குச் சேதம் ஏற்படுத்தப்பட்டால் இன்சொம்னியா பொறுப்பாகாது என்பதான வாசகமொன்றை இரு கட்சிக்காரருக்குமிடையிலான ஒப்பந்தத்தில் இன்சொம்னியா சேர்த்திருந்தது.

முதலீட்டுச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட ஒரு மாதத்தின் பின்னர், தொழிற்சாலை சுற்றாடலுக்கு ஆபத்தானதெனக் குற்றஞ் சாட்டியதுடன் ஜேமியாவின் குப்பைகூழங்களை வேர்னியாவிற்குக் கொணடுவர வேண்டாமென்றும் வேர்னியாவின் குடியிருப்பாளர்கள் கிளீனப்பிற்கெதிராகப் பாரிய ஆர்ப்பாட்டமொன்றை நடத்தினர். ஜேமியாவின் மாநகர சபை முதலீட்டனைக் கையேற்றதுடன் வேலையாட்களின் சம்பளத்தைக் கொடுத்துவிட்டு தொழிற்சாலையை மூடியது. இன்சொம்னியாவின் மத்திய சுற்றாடல் அதிகார சபையிடமிருந்து சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தை மாநகர சபை பெறுவதாகப் பொறுப்பேற்றிருந்த போதிலும் அதைப் பெறத் தவறியிருந்ததென்பது பின்னர் வெளிப்படுத்தப் பட்டது. சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறாது கிளீனப்பானது காலங்கடந்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தியதன் விளைவாக காற்று மற்றும் நீர் மாசுபடுத்தல் ஏற்படுத்தப் பட்டிருந்தது.

இன்சொம்னியாவிற்கெதிராக கிளீனப் முதலீட்டுப் பிணக்குகளைத் தீர்ப்பதற்கான சர்வதேச நிலையத்தில் (ICSID) நடுத்தீர்ப்பு நடவடிக்கைகளை ஆரம்பிக்கவே நியாய சபையானது BIT இனை அடிப்படையாகக் கொண்டு US$ 20 மில்லியன் நட்டஈடாக கிளீனப்பிற்கு வழங்கியது.

1. நீர் ICSID நடுத்தீர்ப்பு நியாய சபையின் அங்கத்தவரொருவரென அனுமானிக்க. அங்கு முதலீடு சம்பந்தமான வெளியகற்றப்படுதல் (expropriation) காணப்பட்டதென நீர் எவ்விதம் வாதாடுவீர்?

2. நியாய சபையானது கிளீனப்பிற்கு BITஇல் காணப்பட்ட முழுமையான பாதுகாப்பு வாசகத்தை அடிப்படையாகக் கொண்டே நட்டஈடு வழங்கியிருந்தது. இன்சொம்னியாவின் வழக்கறிஞரென்ற அடிப்படையில் இம்முடிவினை அவ்விதம் எதிர்த்துரைப்பீர்?

3. கிளீனப் தீர்ப்பினை இன்சொம்னியாவில் அமுலாக்க எண்ணுகின்றது. இன்சொம்னியாவின் சட்ட முறைமையானது இலங்கையினதை ஒத்ததென அனுமானித்து, தீர்ப்பு அமுலாக்கப் படுவதனைத் தடுப்பதற்கு இன்சொம்னியா என்ன நடவடிக்கைகளைப் பின்பற்ற வேண்டும் மற்றும் என்ன படிமுறைகளை எடுக்க வேண்டுமென்பது பற்றி விபரிக்க.

பகுதி ஆ

4. சிறிய மூன்றாம் உலக நாடும் எரிபொருள் வளமுடையதுமான பெற்ரோகா என்பது தொழிற்துறைசார் அபிவிருத்தியை முடுக்கிவிடுவதற்கு முயல்கின்றது. மூலதனம் ஏற்றுமதி செய்யும் நாடொன்றான ஆலாந்து என்பது பெற்ரோகாவில் பாரிய எரிபொருள் செயற்திட்டங்களில் ஈடுபட விரும்புகின்றது. எனினும் ஆலாந்தின் அரசியல் நிலமையும் ஸ்திரமும் குறுகிய காலத்திற்காகவிருக்கலாமென பெற்ரோகா கவலையடைந்துள்ளது.

ஆலாந்து பெற்ரோகாவுடன் BIT ஒன்று பேரம்பேசுவதற்கு விரும்புகின்றது. நீர் ஆலாந்தின் பிரதிநிதி. ஆலாந்துக்கும் பெற்ரோகாவுக்குமிடையில் BIT ஒன்றினை வரைக. அந்த BITஇல் நீர் உள்ளடக்க விரும்புகின்ற ஏதாவது மூன்று முக்கிய உறுப்புரைகளை காரணங்கள் தந்து அடையாளம் காட்டுக.

5. "தமது பல்தேசியக் கம்பனிகள் அவர்களது பொறுப்புக் கூறுதலை தேவைப்படுத்துகின்றதான வளர்ந்துவரும் தராதரத்திற்கேற்ப நடந்து கொள்கின்றனவா என்பதனை உறுதிப்படுத்தும் பொருட்டு தலையிடுவதற்காக வெளிநாட்டு மூலதனம் தொடர்பாக மூலதனத்தை வரவேற்கும் நாடுகளுக்கு கடமைகளோடு உரிமைகளும் இருக்கின்றன என்பது தற்போது உருவாகியுள்ள கருத்தேற்பொன்றாகும்"

M.Sornaraja, The International Law of Foreign Investment, 3rd edi., (2010), p.144

இவ் வளர்ந்துவரும் தராதரம் என்பது என்ன மற்றும் வரவேற்கும் நாடுகள் அவற்றிற்கு எவ்வாறு முகங்கொடுக்கின்றன என்பதை பொருத்தமான எடுத்துக்காட்டுகள் தந்து ஆராய்க.

6. "வெளிநாட்டு மூலதனமானது மூலதனத்தை வரவேற்கும் நாடுகளில் அபிவிருத்தி நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தி அதிகூடிய பங்களிப்பினைச் செய்வதற்கு மூலதனத்தை வரவேற்கும் நாடுகளுக்குச் சிறந்த வாய்ப்பினை வழங்குகின்ற அதே வேளையில் அவை பாரதூரமான ஆபத்துக்களையும் அறைகூவலையும் வரவேற்கும் நாட்டுக்குக் கொண்டு வரலாம்".

சர்வதேச முதலீட்டுச் சட்டத்தில் காணப்படுவதான ஒன்றுக்கொன்று முரணான பாரிய கோட்பாடுகளுடன் தொடர்புபடுத்தி, வெளிநாட்டு மூலதனம் கொண்டுவருவதான வாய்ப்புக்கள் மற்றும் ஆபத்துக்கள் தொடர்பாக விமர்ச்சித்து மதிப்பிடுக.

7. "வெளிநாட்டு முதலீட்டாளரின் உரிமைகளைத் தீர்மானிப்பதில் மூலதனத்தை வரவேற்கும் நாடுகள் பங்கு வகிக்கின்றன. அவை வரவேற்கும் நாட்டில் பிரவேசிப்பதற்கான நிபந்தனைகள் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர் என்ன விதமாக வியாபாரம் செய்கின்றனர் என்பனவற்றுடன் சம்பந்தப்பட்டவை. ஆகவே வெளிநாட்டு முதலீட்டாளர் வரவேற்கும் நாட்டிலே பலவகைப்பட்ட தடைகளுக்கும் எண்ணிக்கையான மட்டுப்பாடுகளுக்கும் முகங்கொடுக்க வேண்டியுள்ளது."

தமது பொருளாதார மற்றும் சமூக மேம்பாட்டினை உறுதி செய்யும் பொருட்டு வெளிநாட்டு மூலதனத்தை விதிமுறைகளுக்குட் படுத்துவதற்கு வரவேற்கும் நாட்டிற்குக் கணப்படுவதான உரிமைகள் தொடர்பாக விமர்ச்சித்து ஆராய்க. பொருத்தமான தீர்ப்புச் சட்டத்தினால் உமது விடையை ஆதாரப்படுத்த வேண்டுமென எதிபார்க்கப் படுகிறீர்.

*